

சட்டமன்றப் பேரவையில், நேற்று (9.4.2025) முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

### ‘தகைசால் தமிழர்’ மறைந்த அய்யா குமரி அனந்தன்

# தமிழால் நம் நெஞ்சங்களில் என்றும் நிறைந்திருப்பார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் புகழாரம்!

**சென்னை, ஏப். 10 -**

**தகைசால் தமிழர் மறைந்த அய்யா குமரி அனந்தன் அவர்கள் தமிழால் நம் நெஞ்சங்களில் என்றும் நிறைந் திருப்பார் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் புகழாரம் சூட்டியுள்ளார்.**

இலக்கியச் செல்வர் அய்யா குமரி அனந்தன் அவர்களின் மறைவை யொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:



காங்கிரஸ் பேரியக்கத்தின் மூத்த தலைவரும் தமிழின்பால் பெரும் பற்று கொண்டவருமான இலக்கியச் செல்வர் அய்யா குமரி அனந்தன் அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தி யறிந்து மிகுந்த துயருற்றேன்.

குமரி மாவட்டத்தில் பிறந்து, பெருந்தலைவர் காமராசரின் அடியொற்றி, காங்கிரஸ் பேரியக்கத்துக்காகத் தன்னை ஒப்படைத்துக் கொண்ட அவரது மறைவு தமிழ்ச்சமூகத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். தனது அயராத உழைப்பால் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற அவர், ஒரு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டுத் தொண்டாற்றினார். நாடாளுமன்றத்தில் தமிழில் பேசுவதற்கான உரிமையை நிலைநாட்டிய பெருமை இவரையே சாரும். அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்கள் இது குறித்து குறிப்பிடும்போது, “தனிமரம் தோப்பாகாது என்ற பழமொழியை மாற்றி அமைத்துவிட்டார்” எனப் புகழாரம் சூட்டினார்.

தமிழே தன் மூச்செனத் தமிழ்த் திருப்பணிக்கு வாழ்ந்திட்ட அவரது பெருவாழ்வைப் போற்றி, அவருக்கு நமது அரசின் சார்பில் கடந்த ஆண்டு ‘தகைசால் தமிழர்’ விருது வழங்கி பெருமை கொண்டோம். விடுதலை நாள் விழாவில் அந்த விருதினை நான் வழங்கியபோது, என் கைகளை இறுகப்பற்றிக் கொண்டு வாஞ்சையோடு உறவாடிய அவரது நினைவு என் கண்களில் கண்ணீரைப் பெருக்குகிறது. ஏராளமான நூல்களையும் எண்ணற்ற மேடைகளையும் கண்ட அவரது தமிழால் நம் நெஞ்சங்களில் அவர் என்றும் நிறைந் திருப்பார் என ஆறுதல் கொள்கிறேன்.

‘தகைசால் தமிழர்’ அய்யா குமரி அனந்தன் அவர்களது மறைவால் வாடும் அருமை சகோதரி தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்ட அவரது குடும்பத்தினர், உறவினர்கள், காங்கிரஸ் பேரியக்கத் தொண்டர்கள், அரசியல் மற்றும் இலக்கிய வட்டங்களைச் சேர்ந்த சொந்தங்கள் என அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# “அதிகாரங்களை அபகரிக்கும் ஆளுநர்களுக்கு எச்சரிக்கை!”

## உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு – கேரள முதல்வர் பினராயி விஜயன் வரவேற்பு!

**திருவனந்தபுரம், ஏப்.10 -**

**மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் ஆளுநர் நிறுத்தி வைத்ததை எதிர்த்து தமிழக அரசு தொடர்ந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு கூட்டாட்சி அமைப்பை உறுதிப்படுத்தக் கூடியது என கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து அவர் தெரிவித்ததாவது:-

உச்சநீதிமன்ற தீர்ப்பு குறித்து கருத்து தெரிவித்துள்ள பினராயி விஜயன், “மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் ஆளுநர் நிறுத்தி வைத்ததை எதிர்த்து தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு கூட்டாட்சி அமைப்பையும், சட்டமன்றத்தின் ஜனநாயக உரிமைகளையும் நிலைநிறுத்துகிறது. அமைச்சரவையின் ஆலோசனையின்படி ஆளுநர்கள் செயல்பட வேண்டும் என்பதை உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே பலமுறை தெளிவுபடுத்தியுள்ளது.

மேலும், இந்த தீர்ப்பு மசோதாக்களை நிறைவேற்றுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவை நிர்ணயித்துள்ளது. சட்டமன்றத்தின் அதிகாரங்களை ஆளுநர்கள் அபகரிக்கும் போக்குக்கு எதிரான எச்சரிக்கை யாகவும் இந்தத் தீர்ப்பு அமைகிறது.

இது ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி. கேரள சட்டமன்றத்தால் நிறை வேற்றப்பட்ட மசோதாக்கள் 23 மாதங்கள் வரை கிடப்பில் போடப்பட்ட நிலையில் உள்ளன. இதற்கு எதிரான சட்டப் போராட்டத்தில் கேரளா ஈடுபட்டுள்ளது. இந்தத் தீர்ப்பு, கேரளா எழுப்பிய இது போன்ற பிரச்சினை களின் பொருத்தத்தையும் முக்கி யத்துவத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது”

இவ்வாறு கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.





தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் ஆத்தூரில் இருந்து வெள்ளைகோவில் மற்றும் வரன்யவேல் வழியாக குரும்பூர் ஆகிய ஊர்களுக்கு பேருந்து வசதியினை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் கொடி அசைத்து துவக்கி வைத்தார். உடன் ஆத்தூர் ஒன்றிய செயலாளர் ஏ.பி. சதிஸ்குமார், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் செங்குழி ஏ.பி.ரமேஷ், உடன்குடி ஒன்றியம் பாலசிங், நகரச் செயலாளர் வாள் சுடலை, வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், குரும்பூர் நவீன்குமார், காயல்பட்டினம் முத்து முஹம்மது கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், உடல்நலக்குறைவால் மறைவெய்திய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களின் இல்லத்திற்கு நேற்று(9.4.2025) நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது மகளும், முன்னாள் ஆளுநருமான திருமதி தமிழிசை சௌந்தரராஜன் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர ராஜா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

### மார்க்சிய மேதையும் பெரும் சிந்தனையாளருமான

# காரல் மார்க்சிற்கு சென்னையில் சிலை - முதல்வருக்கு நன்றி!

## மாமேதை காரல் மார்க்ஸ் சிலைக் குழு ஒருங்கிணைப்பாளர் அ. மார்க்ஸ் அறிக்கை!

சென்னை, ஏப்.10-

மார்க்சிய மேதையும் பெரும் சிந்தனையாளருமான காரல் மார்க்ஸ் அவர்களுக்கு சென்னையில் சிலை வைக்கப்படும் என்று அறிவித்த முதல்வர் அவர்களுக்கு மாமேதை காரல் மார்க்ஸ் சிலைக் குழு ஒருங்கிணைப்பாளர் அ. மார்க்ஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேராசிரியர் அ.மார்க்ஸ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



உலகெங்கிலும் மார்க்சிய மேதை காரல் மார்க்சிற்குச் சிலை என்பது கொண்டாடப்பட்டிருந்த போதி லும் நம் தமிழகத்தில் இதுவரை அவருக்குச் சிலை இல்லாதிருந்த நிலை இன்று போக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் இந்த வேண்டுகோளை ஏற்று தமிழக அரசு இன்று காரல் மார்க்ஸ் சிலை அமைப்பை முன்வைத்து உள்ளமையை நாம் மனமார வாழ்த்துகிறோம்.

மானுடத்தின் மகத்தான மனிதர்களுக்குச் சிலை வைத்துக் கொண்டாடுவது என்பதைத் தமிழகம் என்றென்றும் பெருமிதத்துடன் கொண்டாடி வந்துள்ளது. மகாத்மா காந்தி தொடங்கி தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, மகாகவி பாரதி, சிங்காரவேலர், அம்பேத்கர் வரை இவ்வாறு கொண்டாடிய பெருமை நமக்குண்டு. நம்மை அடிமைப் படுத்தப்பட்டவர்களுக்கும் கூட இங்கே சிலை வைக்கப்பட்டதும் கூட இங்கு உண்டு. இதுவரை இன்று உலகளவில் பெரிய அளவில் கொண்டாடப்பட்டிருந்த போதும் பேரறிஞர் காரல் மார்க்சுக்கு இதுவரை இங்கு சிலை இல்லாத நிலை இன்று நீக்கப்பட்டுள்ளது.

இதனை சாத்தியமாக்கிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எம் நன்றிகள் என்றென்றும் உரித்தாகின்றன.

உலகின் எல்லாப் பெருமைகளுக்கும் பின்னணியாக உள்ளது நம் தொழிலாளர்களின் உழைப்புத்தான் என்பதை முன்னிறுத்தி உழைப்பின் பெருமையையும் தொழிலாளர்களின் மேன்மைகளையும் கவனம் ஈர்த்து, “உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுவோம்” என முழங்கிய மார்க்சிய மேதையும் பெரும் சிந்தனையாளருமான காரல் மார்க்சிற்குச் சிலை எடுக்கும் பெருமைக்குரிய திட்டத்தை தமிழ்நாடு அரசு இன்று பொறுப்பேற்றுள்ளதை நாம் மனமாரக் கொண்டாடுவோம். தமிழகத்திற்கு என்று நீண்ட போராட்ட வரலாறுகள் தியாகங்கள் முதலியன உண்டு.

இப்படித் தொழிலாளர்களின் போராட்டங்களின் ஊடாக இன்று உருப்பெற்றதுதான் இந்தியாவின் சிறப்பு என்பதும் தமிழகத்தின் தனிச் சிறப்புகள் என்பனவும். நம் தந்தை பெரியார் முதன் முதலில் இரு உலகப் பயணம் சென்றார் என்றால் அது காரல் மார்க்சின் நாட்டிற்குத்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

2021 ஆம் ஆண்டு தி.மு.க, ஆட்சிக்கு வந்தது தொடங்கி இன்றுவரை கடந்த மூன்றாண்டு காலமாக மாமேதை காரல் மார்க்ஸ் சிலைக்குழு சார்பில் எங்களின் பரப்புரைகளை மேற்கொண்டு வந்தோம். அரசின் ஒப்புதலோடு இது மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் எம் தோழர்கள் தொடர்ந்து உறுதியாக இருந்ததையும் இந்தக் கணத்தில் நினைவு கூர்கிறோம். மாநகர் சென்னையில் காரல் மார்க்சிற்கு சிலை அமைத்திடக் கோரி தொடங்கிய இந்த பரப்புரையின் மூலமாக பல்வேறு தலைவர்களை சந்தித்து கோரிக்கை மனு அளித்தோம்.

குறிப்பாக, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் ஜெயசீலன் மற்றும் அன்றைய முதன்மைச் செயலாளர் உதயச் சந்திரன் மற்றும் தலைமைச் செயலாளர் இறையன்பு முதலானோரையும் காரல் மார்க்ஸ் சிலை வைப்பு தொடர்பாக வேண்டி அணுகினோம். அவர்கள் அனைவரும் இந்த முயற்சியைப் பாராட்டி உரிய உதவிகளைச் செய்தனர். முதல்வரின் கவனத்திற்கு இது குறித்து அவர்கள் உரிய முறையில் கொண்டு சென்றதையும் இங்கு குறிப்பிடுவது அவசியம்.

உழைக்கும் மக்கள் மாமன்றத்தின் நிறுவனர் மதிப்பிற்குரிய தோழர் குசேலர் அவர்கள் மற்றும் கவிஞர் செவ்வியன் முதலானோர் இது குறித்து உரிய நிதி அளிக்க முன் வந்ததையும் மிக்க நெகிழ்ச்சியுடன் நினைவு கூருகிறோம்.

மேலும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் நல்லகண்ணு மற்றும் மாநிலச் செயலாளர் தோழர் முத்தரசன், தி.மு.க.வின் நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் தோழர் கனிமொழி கருணாநிதி மற்றும் தி.மு.க.வின் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் சண்முகம் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் செயலாளர் தோழர் பாலகிருஷ்ணன், இந்நாள் செயலாளர் தோழர் பெ.சண்முகம் மற்றும் கந்தர்வக்கோட்டைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தோழர் எம்.சின்னதுரை மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நிறுவனர் தோழர் தொல்.திருமாவளவன், மற்றும் திராவிட இயக்க தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப. வீர பாண்டியன் மற்றும் ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தோழர் எழிலன் மற்றும் திராவிடர் கழகத்தின் தலைவர் கீ.வீரமணி மற்றும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் தோழர் கொளத்தூர்மணி மற்றும் பொதுச்செயலாளர் தோழர் விடுதலை ராசேந்திரன் மற்றும் பேராசிரியர் தோழர் சரசுவதி மற்றும் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தலைவர் தோழர் கோவை ராமகிருஷ்ணன், தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் தியாகு மற்றும் தமிழக மக்கள் முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் தோழர் பொழிலன் மற்றும்,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாலெ) விடுதலை கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் ஆசைத்தம்பி மற்றும் இடது தொழிற்சங்க மையத்தின் ஆலோசகர் தோழர் எஸ்.குமாரசாமி, மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாலெ) ரெட் ஸ்டார் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் மனோகரன், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிய லெனினிய மாவோ சிந்தனை) கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பாலன் மற்றும் அமைப்பு சாராத் தொழிலாளர் சங்கத்தின் ஒருங்கிணப்பாளர் தோழர் ஆர். கீதா மற்றும் யு.சி.பி.ஐ. கட்சியின் தலைவர் தோழர் பாஸ்கர் மற்றும்

மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர், தோழர் முருகன்காந்தி மற்றும் மாற்று ஊடக மையத்தின் பொறுப்பாளர் தோழர் காளீஸ்வரன் கலைக்குழுவினர், திரைத்துறையினர், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் உள்ளிட்ட ஏராளமான உழைக்கும் மக்கள் சமூக ஆர்வலர்கள், ஜனநாயக சக்திகள் இக்கோரிக்கைக்கு முழு ஆதரவளித்தனர் என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

சுருக்கம் கருதி இன்னும் பல ஏராளமான தோழர்கள் பெயர்கள் இங்கே பதியப் படவில்லை. கோரிக்கைக்கு ஆதரவு அளித்த அனைவர்க்கும் எம் நன்றிகள். தமிழக அரசிற்கும் முதல்வர் அவர்களுக்கும் மீண்டும் எம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.